**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 109/2023

**எ. ம.சா1 அண்ணாத்துரை**

| | |
|---|---|
| Name | : அண்ணாத்துரை |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 11.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் புளியங்குடி கிளையில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள் தாக்கல் இல்லை)

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் புளியங்குடி பணிமனையில் நடத்துனராக பணிபுரிவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் போது மனுதாரர் ஓடி வந்து பேரூந்தில் ஏற முற்பட்டார் என கூறியுள்ள நிலையில் பேரூந்தை நிறுத்தி அவரை ஏற்றி சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் இருவாசல்களையும் பார்த்து ஆட்கள் ஏறிய பிறகு பேரூந்து 15 அடி தூரம் சென்றபிறகு அவர் ஏற முற்பட்டுள்ளார் அதனால் தான் விபத்து ஏற்பட்டது. பேரூந்து 15 அடி துரம் சென்று விட்டதாக எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில்

சொல்லவில்லை என்றால் சரிதான். முதல்விசாரணை வாக்குமூலத்தில் மெதுவாக பேருந்தை நகர்த்தும் போது விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் பேருந்தில் ஏறுவதை நான் தான் கவனிக்காமல் விசில் அடித்ததால் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்திற்கு நானும், பேருந்து ஒட்டுனரும் தான் காரணம் என்றால் சரியல்ல. எங்களது போக்குவரத்து கழகத்திற்கு ஆதரவாக மனுதாருக்கு இழப்பீடு கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் விபத்தின் போது மது அருந்தி இருந்தார். நாங்கள் தான் அவரை மருத்துவமனையில் சேர்த்தோம். அதற்கான ஆவணங்கள் எதுவும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மது அருந்தி இருந்ததாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது. பேருந்து ஒட்டுனரை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்க உள்ளோமா என்றால் விசாரிக்க உள்ளோம். என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.